**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.42/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**6 |
| Name | : | **ஜென்சி** |
| Father's / Husband Name | : | **ஜஸ்டின் சாம்** |
| Address | : | அருப்புக்கோட்டை |
| Age | : | 36/2026 |

**தேதி : 15.04.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் அருப்புக்கோட்டையில் வசித்து வருகிறேன். நான் தற்போது சென்னையில் உள்ள கனரா வங்கி, வேளாச்சேரிகிளையில் மேனேஜராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2016ம் வருடத்தில் பெரியகுளம் தேணி மாவட்டத்தில் உள்ள கனரா வங்கி கிளையில் பி.ஓ. வாக வேலை செய்து வந்தபோது பெரம்பலூர் மாவட்ட குற்ற பிரிவு போலீஸார் 22.04.2016ம் தேதியிட்ட கடிதத்தின்படி வங்கியில் ் அனுப்பிவைத்துள்ள சாந்தகுமாரி என்பவருடைய சேமிப்பு வங்கி கணக்கு 1017101054051 என்ற வங்கி கணக்கின் பரிவர்த்தனை காட்டக்கூடிய statement கடந்த 25.04.2016ம் தேதியிட்ட பதிவுகளை போலீஸாரிடம் கொடுத்தேன். **எங்கள் வங்கிலிருந்து கொடுக்கப்பட்ட statement அ.த.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு டி.சி.பி பெரம்பலூர் காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தினை விசாரணையின்போது அவரிடம் ஒப்படைத்தேனா என்றால் நான் ஒப்படைக்கவில்லை. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னாலும், போலீஸார் அழைத்ததன் பேரில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான்,, statement கேட்டார்கள் கொடுத்தேன். நான் என்னுடைய வங்கி statement – ல் சாந்தகுமாரி என்பவரின் பெயருக்கு ரூ. 1,26,550/– வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் யாரிடமிருந்து பணம் அனுப்பப்பட்டது என்ற விவரம் அந்த statement ல் காணப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.